20 FEB 2000
மாநகர

20/2/2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 08 ஞாயிற்றுக்கிழமை ( 20 - 02 - 2000 ) VALAMPURI ஒலி: 63

★ உண்ணாவிரதிகளை பார்வையிட

# பெற்றோர் உறவினர்களுக்கு

# பாதுகாப்பு அமைச்சு அனுமதி

## ச.தே.செ. சங்கம் அழைத்துச்செல்லும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள படையினரை பெற்றோர்கள், உறவினர்கள் சென்று பார்ப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இதேவேளை உண்ணாவிரதமிருக்கும் கைதிகளில் ஏழு கைதிகளின் நிலைமை மிகமோசமானதாக இருப்பதாகவும் வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னியில் விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் படையினரைப் பார்வையிடுவதற்கு பெற்றோர்களையும் உறவினர்களையும் மட்டுமே அழைத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குடும்பத்தில் ஒருவர் என்ற ரீதியில் 15பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் பெரும்பாலும் எதிர்வரும் புதன்கிழமை வன்னி செல்லக் கூடியதாக இருக்கும் எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இப்பொழுதுசிறையிலிருக்கும் கைதிகளை உறவினரையும் பெற்றோரையும்ஒன்றிணைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகள் நிலைகவலைக்கிடம்

(வவுனியா)

வன்னியில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் படைவீரர்கள் ஏழுபேரின் நிலை மேலும் மோசமடைந்திருப்பதாகவும் அவர்கள் சிறுநீர் கழிக்க முடியாத நிலையில் கைதிகள் கஷ்டப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக் கடற்கரைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் இரு சடலங்கள்

(வவுனியா)

முல்லைத்தீவுக் கடற்கரையில் இரு உருக்குலைந்த ஆண்களின் சடலங்கள் கடந்த வெள்ளிக்கிழமை கரை ஒதுங்கியுள்ளது.

கடற்றொழிலுக்குச் சென்று காணாமல் போயிருந்த மீனவர்களின் சடலங்களாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

அண்மைக் காலமாக முல்லைத்தீவுக் கடலில் மீன் பிடிக்கச்சென்றவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு பலர் காணாமல் போன சம்பவங்கள் நடைபெற்றுள்ளது.

(103)

## மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார் அளவெட்டிப் பகுதியில் நேற்றுச் சம்பவம்

அளவெட்டிப் பகுதியில் மிதிவெடியில் சிக்கிய ஒருவர் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அளவெட்டி கூசையப்பர் ஆலயத்திற்கு அருகாமையில் குரும்பவளவு என்னுமிடத்தில் கைவிடப்பட்ட இராணுவக் காவலரண் பகுதியில் நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

இம்மிதிவெடியில் அளவெட்டியைச்சேர்ந்த குடும்பஸ்தர் தர்மலிங்கம் மோகன் (வயது-30) என்பவரே காலை இழந்தவராவார்.

(வ 78,34)

## வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதி படையினரால் சுற்றிவளைத்து தேடுதல்

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதி நேற்று சனிக்கிழமை அதிகாலை முதல் 10 மணிவரை சுற்றிவளைக்கப்பட்டு கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பின் போது குடியிருப்பாளர்களின் வதிவிட அனுமதிப்பத்திரங்களை வீடுவீடாகச் சென்று சேகரித்த பாதுகாப்புப் படையினர் பின்னர் அனைவரையும் வைரவப் புளியங்குளம் சிறுவர்பூங்கா மைதானத்திற்கு வருமாறு அறிவித்து வதிவிட அனுமதிப் பத்திரங்களை பரிசோதித்த பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(வ-103)

## தனங்களப்பில் ஒருவர் உயிரிழப்பு

தனங்களப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

வீரவேங்கை இன்னமுதன் கணபதிப்பிள்ளை தனேந்திரன் (ஓட்டுசுட்டான்) என்னும் போராளியே உயிரிழந்ததாக புலிகளின் குரல் தெரிவித்துள்ளது,

[வ - 6)

## எறிகணை வீச்சில் புகைமண்டலம்

தனங்களப்புமறவன் புலோ பகுதிகளில் கேரதீவு யாழ்ப்பாண வீதிக்குதெற்காக தினமும் எறிகணைகள் வீழ்ந்து வெடிப்பதனால் அங்கு பெரும் புகைமண்டலமாக காணப்படுகிறது. (வ-21)

## சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் - இருபாலைப் பகுதியில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலத்தை கோப்பாய்ப் பொலிசார் நேற்று மாலை 5 மணியளவில் யாழ். போதனாவைத்தியசலையில் ஒப்படைத்துள்ளனர். (வ)

## புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஹெலி பலாலி இராணுவ முகாமுக்கு

புலிகளினால் சுட்டுவீழ்த்தப்பட்ட பெல்ரக ஹெலி நேற்று மாலை பலாலி இராணுவ முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

212பெல்ரக ஹெலி கடந்த 17ஆம் திகதி ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் எழுந்தமோதலின் போதுபுலிகளினால்சுட்டு வீழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

சிதைந்த நிலையில் பலாலி இராணுவமுகாமிற்கு கொண்டு செல்லப்பட்டபோது இக்ஹெலியை பெருமளவு மக்கள் வீதியோரத்தில் கூடிநின்று பார்த்தனர்.

(வ-6)

## வாதரவத்தை துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலி, ஒருவர் காயம்!

(அச்சுவேலி)

வாதரவத்தைப் பகுதியில் நேற்று நண்பகல் 1-30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றின்போது இளைஞன் ஒருவர்கொல்லப்பட்டுள்ளார் இன்னொருவர் காயமடைந்தும் உள்ளார்,

இறந்தவரின் சடலம் அச்சுவேலிப் பொலிஸாரினால் நேற்று மாலை யாழ், போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காயமடைந்தவரிடமிருந்து 3 கிரனைற்றுக்கள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

(வ . 57)

## அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமருடன் ஜனாதிபதி மந்திராலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க .வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் லயனல் பெர்ணான்டோ மற்றும் இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க ஆகியோர் நேற்றுக்கூடி பேச்சு நடத்தியுள்ளனர்,

அலரிமாளிகையில் 4 மணித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் அமைப்புச் சீர்திருத்தம்

# ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி உத்தியோகபூர்வ கடிதம்

(கொழும்பு)

அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய அரசியல் அமைப்புச் சீர்திருத்தத் திட்டம் தொடர்பாக பேச்சு நடத்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த மாதம் 19ஆம் திகதி எதிர்க்கட்சித் தலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சிற்றிஒவ் றிங்கோ கப்பல் விரைவில் பாதுகாப்பின்றி பயண சேவை!

படையினர் பயணிக்க அனுமதியில்லை

(கொழும்பு)

யப்பானிலிருந்து கொழும்பிற்கு வரவழைக்கப்பட்ட சிற்றிஒவ் றிங்கோ கப்பலின் திருத்த வேலைகள் கொழும்புத் துறைமுகத்தில் துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

தற்போது 500 ஆசனங்கள் பொருத்தும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் லயன்ஸ் கழகம் சேவை புரிகிறது!

(தென்மராட்சி)

பல்வேறு விதமான கஷ்டங்களுக்கும் மத்தியில் தென்மராட்சிப் பிரதேசத்தில் கண் பார்வை குறைவாகவுள்ள மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கொழும்பில் இருந்து மூக்குக் கண்ணாடிகளைக் கொண்டு வந்து வழங்கிய வருகின்றது.

எனவே மூக்குக் கண்ணாடிகளைப் பெறுபவர்கள் மீகவும் கவனமாகப் பாவிக்க வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும் மிருசுவில் அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியுமான டாக்டர் பி. வி. தம்பித்துரை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடாத்திய இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு கண்ணாடிகளை வழங்கி வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கழகத்தின் தலைவர் லயன். எஸ். சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு 100 மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

கழகத்தின் கண்பார்வைத் திட்டத் தலைவர் லயன். எஸ். கே. நவரத்தினத்தின் ஏற்பாட்டில் இக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

லயன்டாக்டர். எஸ். எஸ். அருளானந்தம் உட்பட பிரமுகர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(க-77)

## சின்னஞ்சிறு விளம்பரம்

ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

சகல விதமான ஓவிய வேலைகள் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் பாடசாலைச் சின்னம், கீற்ரேக் ஆகியவற்றை செய்திட S. S. யசோதரன் ஆ'ஸ் 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கி-030)

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்தியகல்லூரி விஞ்ஞானமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் விஞ்ஞானதின் நிகழ்வும், மத்திய ஆய்வாளன் சஞ்சிகை வெளியீடும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடசாலையின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவில், யாழ். பல்கலைக்கழக பௌதீகபீட பேராசிரியர் க. கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

## தொடரும் திருப்பணி வேலைகள்

(புலோலி)

புலோலி மேற்கு வாணர் குடியிருப்பு சொக்கன் கலட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான திருப்பணி வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இத்திருப்பணி வேலைகளுக்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. (க-52)

## விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு இம் மாதம் 19 ஆம் திகதி வரை விமானப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக தரப்படுகின்றது.

**சங்கானை**

124365 ஏ, 135669 ஏ,
135751 ஏ

**சாவகச்சேரி**

130518 ஏ, 130518 பி,
134926 ஏ, 134926 பி,
134943 ஏ, 134955 ஏ,
134958 ஏ, 134958 பி,
134958 சி

**யாழ்ப்பாணம்**

130019 ஏ, 130395 ஏ,
132397 ஏ, 132397 பி,
136905 ஏ, 136905 பி,
136908 ஏ, 136908 பி,
136967 ஏ, 136985 ஏ,
136985 பி, 136985 சி,
136986 ஏ, 136986 பி,
136986 சி, 137010 ஏ,
137012 ஏ, 137090 ஏ,
137133 ஏ

**கரவெட்டி**

135272 ஏ

**கோப்பாய்**

131554 ஏ, 131554 பி,
136209 ஏ, 136229 ஏ

**நல்லூர்**

133265 ஏ, 135988 ஏ,
135988 பி, 137201 ஏ,
130707 ஏ, 131821 ஏ,
135523 ஏ, 135563 ஏ,
135563 பி, 135672 ஏ,
135672 பி, 135766 ஏ

**பருத்தித்துறை**

124636 ஏ, 135333 ஏ,

**சண்டிலிப்பாய்**

1.7319 ஏ, 129238 ஏ,
130725 ஏ, 130979 ஏ,
131589 ஏ, 131589 பி,
131645 ஏ, 131645 பி,
131645 சி, 131647 ஏ,
131723 ஏ, 131723 பி,
131798 ஏ, 131798 பி,
131798 சி, 131803 ஏ,
131847 ஏ, 135511 ஏ,
135511 பி, 135528 ஏ,
135528 பி, 135528 சி,
135528 டி, 135540 ஏ,
135553 ஏ, 135659 ஏ,
135659 பி, 135697 ஏ,
135697 பி, 135706 ஏ,
135721 ஏ,

**தெல்லிப்பழை**

128947 ஏ, 131691 ஏ,
131691 பி, 131787 ஏ,
131794 ஏ, 131823 ஏ,
134756 ஏ, 135578 ஏ,

**உடுவில்**

136239 ஏ, 136239 பி,
128901 ஏ, 128946 ஏ,
129241 ஏ, 131587 ஏ,
131599 ஏ, 131599 பி,
131599 சி, 131669 ஏ,
131727 ஏ, 131727 பி,
131727 சி, 131743 ஏ,
131743 பி, 131757 ஏ.
131757 பி, 131777 ஏ,
131779 ஏ, 131795 ஏ,
131819 ஏ, 131819 பி,
131819 சி, 132764 ஏ,
135594 ஏ, 135594 பி,
135594 சி, 135656 ஏ,
135740 ஏ, 135740 பி,

## முன்னணி வீரர்கள் சேர்க்கப்படுவர்

(கொழும்பு)

பாகிஸ்தானில் எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கைக்கு எதிராக இடம்பெறும் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் முன்னணி வீரர்களான அரவிந்த டீ.சில்வா ரங்கன ஹேரத், அருச்சுனா ரணதுங்கா ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினர் தெரிவித்துள்ளனர். (க)

## உதைபந்தாட்டமும் பரிசளிப்பும்

(புலோலி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஈ, ஆர் போக்குவரத்துச் சேவை ஆதரவில் நடாத்தும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் இன்று 20 ஆம் திகதி கழகத் தலைவர் எம். சூரியகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரமதவிருந்தினராக பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எம் பரமானந்தம் கலந்துகொள்வார். (க-52)

## திருட்டு

(இணுவில்)

சில நாட்களாக குறைந்திருந்த பகற்களவுகள், இணுவில் பகுதியில் மீண்டும் தொடங்கியுள்ளதென அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இணுவில் மேற்குப் பகுதி தோட்டம் ஒன்றில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த நல்லினக் கறவைப்பசு ஒன்றினை கள்வர் திருடிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. (க-49)

## பருத்தித்துறையில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டிகள்

(கரணவாய்)

ஈ. ஆர். போக்குவரத்துச் சேவை நிறுவனத்தால்நடாத்தப்பட்டு வரும் ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதிஆட்டங்கள் அண்மையில் பருத்தித்துறை ஐக்கியவிளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

இவ் அரையிறுதி ஆட்டத்தில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து ஆடிய வதிரி டைமன்ஸ்விளையாட்டுக்கழகத்தை 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

அதனைத்தொடர்ந்து நடைபெற்ற 2வது அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் அதனை எதிர்தாடிய வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகத்தை மேலதிக உதைமூலம் (தண்டஉதை) 5 ;2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இச்சுற்றுப் போட்டிக்கு நடுவர்களாக கே. முகுந்தன் எஸ். அருளாந்தசோதிகே.முருகவேல் ஆகியோர் கடமையாற்றினார்.

இன்றைய ஆட்டத்தில் பொமர்ஸ்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-27)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது

(ஈச்சமோட்டை)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி ஆடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேக்கல்லூரி அணி, 11. 1 பந்துப் பரிமாற்றத்தில் சகலஇலக்குகளையும் இழந்து 25 ஓட்டங்களைப் பெற்றது.

பதில் துடுப்பாட்டத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி 9. 5 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றிக்குத் தேவையான 26 ஓட்டங்களைப் பெற்று இவ்வாண்டு சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.

(க-59)

## வேலணையில் ஆங்கிலப் பயிற்சி

(திருநெல்வேலி)

தேசிய இளைஞர் சேவை மன்றம் வேலணைப் பிரதேசத்தில் 18-29 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு ஆங்கிலப் பயிற்சி நெறியினை நடாத்த தீர்மானித்துள்ளது.

முற்றிலும் இலவசமாக நடாத்தப்படும் இப் பயிற்சி நெறியில் பங்கு பற்ற விரும்புவோர் தம்மைப் பற்றிய முழு விபரங்களை தங்கள் பகுதி கிராம சேவை அலுவலரிடம் ஒப்படைக்குமாறு வேலணை பிரதேச செயலர் பிரிவு இளைஞர் சேவை அலுவலர் கேட்டுள்ளார்.

(க-76)

## கலைவார இறுதி நிகழ்வு

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் நடாத்தப்படும் கலைவார நிகழ்வுகளின் இறுதி நிகழ்வு (21-2-2000) திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இடம்:- கைலாசபதி கலையரங்கு

காலம்:- 21-2-2000 காலை 9 மணி - 6 மணி

பிரதம விருந்தினர்:-
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர்)

சிறப்பு விருந்தினர்:-
பேராசிரியர் S. பாலச்சந்திரன்
(பீடாதிபதி, கலைப்பீடம்)

காலை 9 மணிக்கு பரிசளிப்பு வைபவமும் பி. ப. 2 மணிக்கு கலைக்குயில் கானங்கள் இசை நிகழ்வும் இடம்பெறும். அனைத்து சபை மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ விளம்பர அன்பளிப்பு:-
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி பி.)
யாழ். மாவட்டம்.

(சி/81) கலைப்பீட மாணவர் ஒன்றியம்.

## மெடிலான்ற் METILANT

ஆங்கில மருந்து நிறுவனம்

ஆங்கில மருந்து விற்பனையில் பல வருட கால முன்னோடிகள்.

பிரதான வீதி, சங்கானை.

பிரதி சனி, ஞாயிறு தினங்களில் M. B. B. S. டாக்டரினால் நோயாளிகள் பார்வையிடப்படுவர். உங்கள் நோய் சம்பந்தமாக டாக்டர்களுடன் ஆலோசனை பெற தொடர்புசெய்து கொடுக்கப்படும்.

T. P. NO:- 070 — 212756 (சி/85)

## மெடிலான்ற் METILANT

ஆங்கில மருந்து நிறுவனம்

தினக்குரல், வலம்புரி விற்பனை முகவர்
பிரதான வீதி, சங்கானை.

PHARMACIST (EXTERNAL) EXAMINATION

18 வருட பரீட்சை வினாத்தாள்கள் விற்பனையில் உள்ளது.

★ தென்மராட்சியில் தொடர்புகொள்ளவேண்டிய இடம்:-

அம்பிகா டிஸ்பென்சறி,
சாவகச்சேரி.

(சி/85)

# வல்வெட்டி நகரசபை எல்லைக்குள்
# 12 வருட ஆதனவரி கழிக்கப்படும்

## தலைவர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(திருகோணமலை)

வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர்களிடமிருந்து 12 ஆண்டுகளுக்கான ஆதனவரி நிலுவையை கழித்துவிட முடிவெடிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிலை காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வு, அகதி வாழ்க்கை காரணமாக வரியிறுப்பாளர் தமது ஆதனவரிகளைச் செலுத்த முடியவில்லை எனவும், எனவே நிலுவையாகவுள்ள ஆதனவரிகளை அறவிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டுவரை நிலுவையாக உள்ள ஆதன வரிகளே கழித்து விடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் கே. சிவாஜிலிங்கத்தின் வேண்டுகோளையடுத்து உள்ளூராட்சி ஆணையாளர் க. சபாபதிப்பிள்ளை மேற்படி ஆதன வரிகளை கழித்துவிடுவதற்கு சம்மதித்துள்ளார்.

இதேவேளையில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு கணனிமற்றும் பக்ஸ்மெசின் வழங்கல், யாழ். மாநகர சபை மற்றும் நகர சபைகளுக்கு வாகனம் வழங்கல், பிரதேச சபைகளை நகர சபைகளாக தரம் உயர்த்தல் போன்றபல கோரிக்கைகளையும்கே.சிவாஜிலிங்கம் வடக்கு கிழக்கு ஆளுநருக்கு விடுத்ததையடுத்து உரிய நடவடிக்கைகள் எடுக்க தான் ஆவன செய்வதாகவும் ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க-4)

# அச்சுவேலியில்
# ஒட்டப்பட்ட சுவரொட்டிக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை

## ஈ.பி.ஆர்.எல்.எவ். பொறுப்பாளர் தெரிவிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பிரதேசத்தில் அண்மையில் ஒட்டப்பட்டிருந்த வரதராஜப் பெருமாளுக்கு எதிரான சுவரொட்டிக்கும் தமக்கும் எதுவித மான தொடர்பும் கிடையாதென அச்சுவேலிப் பிரிவு ஈ.பி.ஆர்.எல்.எவ். பொறுப்பாளர் மு. மனோ தெரிவித்துள்ளார்.

ஒருவரைப் பற்றி விமர்சிப்பதும் தேவையற்ற விதத்தில் கதைப்பதும் மனித நேயமற்ற ஒருசெயல். இவ்வாறான கீழ்த்தரமான செயலை செய்யத் தக்கவர்கள் எமது சுரேஸ் பிரேமச்சந்திரன் அணியில் கிடையாது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களாகிய நாம் எமது கொள்கையில் உறுதியாக நிற்கிறோம். கொண்ட கொள்கையில் எவ்வித மாற்றமும் கிடையாது. என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

(க-57)

# மட்டு. நெற் செய்கை மேற்கொள்ள
# படையினரிடம் அனுமதி பெறும் நடைமுறை நீக்கப்படவேண்டும்

## மட்டு. அரச அதிபர் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 10வருடங்களாக மேற்கொண்டு வரும் நெற்செய்கையை தொடர்ந்து மேற்கொள்வதற்கு பாதுகாப்பு தரப்பினரிடம் அனுமதி பெறும் நடைமுறையை நீக்குமாறு கோரி கடிதம் ஒன்றை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஏ. மே.பத்மநாதன் விவசாய காணி அமைச்சின் செயலர் எம்.எஸ். விக்கிரமாராச்சிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

கடந்த 10 வருடங்களாக இந்நடைமுறை இருந்து வருகிறது. இதனால், விவசாயிகள் பலத்த சிரமத்தை எதிர்நோக்கி வருகிறார்கள்.

இது குறித்து விவசாயிகள் பலத்த அதிருப்தி தெரிவித்து வருவதால் நெற்செய்கைகளுக்கான அனுமதி முறையை மீளாய்வு அல்லது ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-60)

## பட்டமளிப்புவிழா ஒத்திப்போடல்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 1999 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழா திட்டமிட்டபடி நடைபெறாது, பிற்போடப்பட்டுள்ளதாக பதில் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் மேற்படி பட்டமளிப்பு வைபவம், எதிர்வரும் 26 ஆம் திகதி பல்கலைக்கழக மெய்வல்லுநர் கூடத்தில் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# மயிலிட்டி கடற்றொழிலாளி முல்லைக் கடலில் மரணமானார்

(புலோலி)

மயிலிட்டியைச் சேர்ந்த துரைச்சாமி புஸ்பராஜா (வயது 48) என்ற கடற்றொழிலாளி முல்லைத்தீவுக் கடலில் இடம்பெற்ற வன்செயலில் சிக்கி மரணமானார்.

1996 ஆம் ஆண்டில் இருந்து முல்லைத்தீவில் வசித்துவரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் சம்பவதினம் இன்னொருவருடன் மீன்பிடிக்க முல்லைத்தீவு கடலுக்கு கட்டுமரத்தில் சென்றபோதே இவ் அனர்த்தம் இடம் பெற்றது.

கடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்திலேயே மேற்படி மீனவர் இறந்துள்ளார். மற்றவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

(க-52)

## நிர்வாகிகள் தெரிவு

[மந்திகை]

புலோலி வடமேற்கு கமக்காரர் சம்மேளன நிர்வாகிகள் தெரிவு அண்மையில் அப்பகுதி கிராம சேவையாளர் எஸ். நாகசோதிரூபன் முன்னிலையில் இடம் பெற்றது.

சம்மேளனத் தலைவர் ஆ. கிட்ணர் செயலாளர்வே. அருட்செல்வன். பொருளாளர் கனகசபை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

[க-29]

# மொசாம்பிக்கில் தொடர் மழை
# 3 இலட்சம் பேர் வீடிழப்பு, பலர் பலி

(மபுட்டோ)

மொஸாம்பிக்கில் இருவாரகால தொடர் மழையையடுத்து ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கின் காரணமாக 3 இலட்சம் பேர் வீடுவாசல்களை இழந்துள்ளனர். 50 இற்கும் அதிகமான பொதுமக்கள் உயிர் இழந்துள்ளனர்.

வெள்ளத்தினால் வீதிகளும் பாலங்களும் மூடப்பட்டுள்ளதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டர்களை மீட்பதிலும் உணவுப் பொருட்களை வழங்குவதிலும் 7 உலங்கு வானூர்திகள் ஈடுபட்டுள்ளன.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு. மற்றும் மருத்துவப் பொருட்களை அனுப்பி உதவுமாறு ஐக்கிய சபை உலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை மொஸாம்பிக் அரசு 2.7 மில்லியன் டொலர் உடனடியா உதவியாக வழங்குமாறு உலக நாடுகளை கேட்டுள்ளது.

அமெரிக்கா. போர்த்துக்கல் மற்றும் ஐரோப்பிய நாடுகள் 2 மில்லியன் உதவி வழங்க முன்வந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-9)

## இந்தியப்பிரதமர் போர்த்துக்கல் பயணம்

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இவ்வருட இறுதியில்போர்த்துக்கலுக்கு பயணமாகவுள்ளார்.

போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்துகொண்ளும்முகமாகவேஇவர்போர்த்துக்கல்லுக்குபயணமாகிறார்.

(க-9)

# வளர்முக நாடுகளின்
# சந்தைவாய்ப்பைதவிர்க்கவே மேற்குநாடுகள் சூழல் மாசடைதலை பயன்படுத்துகின்றன

(புதுடில்லி)

வளர்முக நாடுகளுக்குச் சந்தை வாய்ப்பினைத் தடுப்பதற்காகவே மேற்குலகநாடுகள் சூழல் மாசடைதல் பிரச்சனைகளை பயன்படுத்துகின்றன என இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் குற்றம்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அவர்மேலும் தெரிவித்ததாவது.

வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்முக நாடுகளின் உற்பத்திப்பொருட்களில் இருந்து தமது சொந்தசந்தைகளைப் பாதுகாப்பதற்காகவே, சுற்றாடல்பிரச்சனைகளை அனுகூலமாக எடுத்துக் கொள்கின்றன.

இதனால் அவர்கள் இலாபம்பெற்றுச் செல்ல, நாம் தொடர்ந்தும் பொருளாதாரப் பின்னடைவுகளையே எதிர்நோக்கி நிற்கிறேம் எனவும்அவர் தெரிவித்தார்,

(க-9)

## பஸ்விபத்தில் 7பேர் பலி

(லண்டன்)

தென்கொரியாவின் கிழக்கு மலைப்பகுதி ஒன்றில் நேற்று முன்தினம்பயணிகள் பேருந்து ஒன்று விபத்துக்கு உள்ளாகியதில்7பேர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

விபத்துக்குள்ளாகிய இந்தப் பேரூந்திலிருந்து பலியாகிய7பேரும் கல்லூரி மாணவர்கள் என்றும், இதில்39 பேர் காயமடைந்துள்ளதாகவும் இதில் பலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-5)

# கஜகிஸ்தான்
# துணைப் பாதுகாப்பு அமைச்சரின் கொலை தேர்தலை குழப்பும் நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(டுஷான்பே)

கஜகிஸ்தான் துணை பாதுகாப்பு அமைச்சர் கொலை செய்யப்பட்டது, நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலைக் குழப்பும் நாசகாரிகளின் செயல் என ஜனாதிபதி எமோமலி ரகிமனோவ் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த புதனன்று கொல்லப்பட்ட கஜகிஸ்தான் துணைப் பாதுகாப்பு அமைச்சர் சாபிரோப் (46 வயது) கொலையை அடுத்து அவசரமாக கூட்டப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

கஜகிஸ்தானில் பெப்ரவரி 27 ஆம் திகதியன்று நடைபெறும் தேர்தல்களை வெற்றிகரமாக நடாத்தி முடிக்க போவதாக ஜனாதிபதி உறுதி அளித்திருந்தமையை அடுத்து அதனைக் குழப்பும் நடவடிக்கையில் நாசகாரிகள் ஈடுபட்டிருப்பதும்.

இதன் ஒரு கட்டமாக கடந்தவாரம் துணைப்பிரதமர் கோட்ஜா அக்பர் காரில் சென்று கொண்டிருக்கையில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதும் அவர் தெய்வாதீனமாக உயிர்தப்பியதும் தெரிந்ததே.

இதே வேளையில் கடந்த புதனன்று மாலை டுஷான்பே மேயருடன் துணைப் பாதுகாப்பு அமைச்சர் காரில் சென்று கொண்டிருக்கையில் குண்டு வெடிப்பு இடம்பெற்றதும் அதில் மேயர் காயங்களுக்கு உள்ளானதும் தெரிந்ததே.

(க-9)

# நேபாள அமைச்சர்கள் 11 பேர் திடீர் இராஜினாமா செய்தனர்

## தளம்பல் நிலையில் அரசாங்கம்

[காட்மண்டு]

நேபாள அமைச்சரவையின் சிரேஷ்ட அமைச்சர்கள் 11 பேர் தமது பதவிகளை இராஜினாமாசெய்துள்ளனர்.

இவர்கள் இராஜிநாமாவுக்கான காரணம் உடனடியாக அறிவிக்கப்படாதபோதிலும் பிரதமர் கிருஷ்ண பிரசாத் பட்டாராயின் தலைமைத்துவத்தின் மீது இவர்கள் கொண்ட அவநம்பிக்கையே இனாஜிநாமாசெய்ததற்கான பிரதான காரணம் என பரவலாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளையில் ஆளும் நேபாள காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 58 பாராளு மன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும், இதற்காக எதிர்க்கட்சியினரின் உதவியை இவர்கள் நாடியிருப்பதாகவும் மற்றொருதகவல்ஒன்று தெரிவிக்கின்றது.

மேற்படி நிலைமை தொடருமானால் நேபாள அரசாங்கம் விரைவில் ஆட்டம் காணும் நிலை உருவாகலாம் என அரசியல் நோக்குநர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில்

# நோர்வே அரசாங்கம் ஈடுபடுவது வரவேற்கத்தக்க விடயமாகும்!

(கொழும்பு)

இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் இனமுரண்பாட்டுக்கும், அதன் விளைவான யுத்தத்திற்கும், ஒரு நிரந்தர அரசியல் தீர்வையும், அமைதியையும் ஏற்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசின் ஒப்புதலுடன் நோர்வே அரசாங்கம் செயற்படத் தொடங்கியிருப்பது இலங்கை வரலாற்றில் வரவேற்கத்தக்க ஒரு கட்டமாகும்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர, விடுதலை முன்னணியைசேர்ந்த வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் இலங்கை இனப் பிரச்சனை விவகாரத்தில் நோர்வே அரசாங்கம் கொண்டுள்ள ஈடுபாடு குறித்து வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்;

அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவில் யுத்தங்களுக்குள் அகப்பட்டு நிற்கும் மக்களுக்கு அமைதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் நோர்வே அரசு மிகுந்த அனுபவங்களையும் கணிசமான வெற்றிகளையும் கண்டிருக்கின்றது. இப்போது இலங்கையின் விவகாரத்தில், இலங்கையோடு வெவ்வேறு வகைகளில் தொடர்புடைய பிரதானமான நாடுகளினுடைய அரசுகளின் ஒத்துழைப்புடன் நோர்வே நாடு மேற்கொண்டுள்ள முன்முயற்சி வெற்றிகரமாக முடிவடைய வாழ்த்துகிறோம்.

நோர்வே ஏற்கனவே பெற்றுள்ள அனுபவங்களுக்கும் இலங்கையின் விவகாரத்துக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுகள உள்ளன. அத்தோடுநோர்வே அரசானது ஏனைய நாடுகளில் ஈடுபட்டபோது அங்கெல்லாம் அதன் ஈடுபாடு வெற்றியை அடைந்ததின்பின்னரே வெளியுலகத்திற்கு தெரியவந்தது.

முன்னரேயே உச்சக்கட்டமான எதிர்பார்ப்புக்களையும் உருவாக்கிவிட்டுள்ளது. இந்த அம்சங்கள் நோர்வேயின் முயற்சிகளைப் பலவீனப்படுத்துபவையாக இல்லாமல் உற்சாகம் தருபவையாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்க்கை.

நோர்வே அரசுக்கு இலங்கையின் இனப்பிரச்சனையும் அதற்கான அரசியற் தீர்வும் ஏனையவற்றைப் போலல்லாமல் முற்றிலும் புதிய அனுபவமாகவே அமையும்.

சர்வதேச சமூகத்தின் நேரடி ஈடுபாட்டை இதுகால வரை பலரும் கோரிவந்துள்ளனர். இப்போது அது யதார்த்தமாகி உள்ளது. முன்னர் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் நாம் நழுவ விட்டதுபோல் இம்முறையும் நடந்து கொள்ளாமல் இந்த அரியசந்தர்ப்பத்தை ஆக்கபூர்வமானமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மறவன்புலோ தபாற்கந்தோர் நுணாவிலில்

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலமாக இடம் பெற்றுவரும் ஷெல் வீச்சுக்களினால் பாதுகாப்பற்ற நிலையில் இருந்துவந்த மறவன்புலோ தபாற்கந்தோர் தற்போது தற்காலிகமாக நுணாவில் பகுதியில் இயங்கி வருகின்றது.

சாவகச்சேரி ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளர் அலெக்சாண்டர் (சாள்ஸ்) எடுத்த முயற்சியின் பயனாகவே இத் தபாற்கந்தோர் நுணாவில் பகுதியில் இயங்கிவருவதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை கேரதீவுப் பாதைக்கு உட்புறமாகவுள்ள நெல்வயல்களில் அறுவடை செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டுள்ளார். [ந]

## குருநகர் மத்திய ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதி இன்றி நோயாளர் அவதி

(ஈச்சமோட்டை)

யாழ். குருநகர் அரசினர் மத்திய மருந்தகத்தில் பிரசவ விடுதி வசதியின்றி நோயாளர் பெரும் அவதிப்படுகின்றனர்.

1996-ம் ஆண்டு இடம் பெயர்வின் பின்னர் குருநகர் மத்தியமருந்தகம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இதில் 1998 ஆம் ஆண்டுப் பகுதியில் பிரசவவிடுதி முற்றாக நிர்மாணிக்கப்பட்டது.

ஆனாலும் இங்கிருந்த குடும்ப நல சேவையாளர் தற்காலிகமாக கோப்பாய்ப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதால் கடந்த இரண்டு வருட காலமாக பிரசவ விடுதியை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது பற்றி வைத்திய சாலைத் தலைமை சுகாதார சேவை மாகாண பிரதிப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்ட போதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இப்பகுதியில் 60க்கும் மேற்பட்ட பிரசவங்கள் மாதம் தோறும் இடம் பெறுவதாகவும் இவற்றுள் அநேகமானவை வீடுகளிலேயே ஏற்படுகின்றன எனவும் இதனால் தாய்மார் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க–59)

## திருக்குறள் மனனப் போட்டி

(அச்சுவேலி)

கோப்பாய் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான திருக்குறள் மனனப்போட்டி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நேற்று காலை 9.00 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

தரம் 03 தொடக்கம் 13 வரையான வகுப்புகளுக்கு இப்போட்டிகள் இடம்பெற்றன.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க பொதுச் சேவை தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணியளவில் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பாடசாலைகள், கல்வித் திணைக்களம், வலயப் பணிமனைகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் தொழிநுட்பக் கல்லூரி ஆகியவற்றில் கடமையாற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர் தரத்தைச் சார்ந்த அனைவரையும் இப் பொதுச்கூட்டத்திற்கு சமுகம் தருமாறு யாழ். கல்விக் கிளையின் செயலாளர் ச. இரகுபதி கேட்டுள்ளார். (க-84)

## சோலையம்மன் ஆலய திருப்பணிகள்

சாவகச்சேரி மண்டுவில் சோலையம்மன் ஆலயத்திற்கான அன்னதான மடம் அமைப்பு வேலைகள்: நடைபெற்று வருகின்றன.

இப்பணி மீசாலையைச் சேர்ந்த கதிரவேலு என்பவரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (க-21)

## (இராசி பலன்)

20.02.2000

ஞாயிற்றுக்கிழமை

[தமிழுக்கு -மாசி 08]

பிரதமை இரவு 9-48 வரை; மகம் காலை 11-00 வரை மரணயோகம் இராகு காலம் மாலை 5-52 முதல் 7-00 மணிவரை சுபநேரம் காலை 10-00 முதல் 11-30 வரை.

**மேடம்:**
வாய்த்தர்க்கம், குழப்பநிலை, அசதி.

**இடபம்:**
சபல புத்தி, தொழில் நஷ்டம், பணியாளர் தொல்லை.

**மிதுனம்:**
இறைநம்பிக்கை, இனசன மகிழ்ச்சி, பணவரவு.

**கடகம்:**
குற்ற உணர்வு, பெண் பகை, பெரியோர் கவலை.

**சிங்கம்:**
கல்வித்தானம், தற்பெருமை, நினைத்ததை முடித்தல்.

**கன்னி:**
விரோதிகள் நட்பு, மனச்சுமை, தொழில் குழப்பம்.

**துலாம்:**
எதிர்பார்ப்பு, தொழில் லாபம், தெய்வீக செலவு.

**விருச்சிகம்:**
பெரியோர்ஆசி, வினோதப் போக்கு, நியாயம்.

**தனுசு:**
எதிர்பாராதமுடிவு, காதல் பகை, அகால உணவு.

**மகரம்:**
தொழில்கஷ்டம், அயலவர் கோபம், ஏமாற்றம்.

**கும்பம்:**
இனிய கனவு, திருமண யோசனை, வெகுமதி.

**மீனம்:**
புதிய சிந்தனை, சுற்றத்தார் உதவி, விருந்துபசாரம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## பண்டிதமணி நினைவாக பரிசில் வழங்கல்

(புலோலி)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் நூற்றாண்டு விழாவையொட்டி, சிறந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்துள்ளது.

இதில், 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 47 சங்கப் பணிளயார்களின் பிள்ளைகளும், சங்கத் தொழிற் பரப்பைச் சேர்ந்த 146மாணவர்களும் அடங்குவர்.

அத்துடன், க. பொ. த சாதாரண தரத்தில் திறமையாகச்சித்தியடைந்த மாணவி ஒருவருக்கும் பண்டிதமணி நூற்றாண்டை யொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில்வெற்றியீட்டிய 8 மாணவர்களுக்கும் பண்டிதமணி நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (க)

## பேருந்து சேவை

[நாவற்குழி]

யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழியூடாக தச்சன் தோப்பு வரையான பேருந்து போக்குவரத்துச் சேவை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த மாதம் 25-ஆம் திகதி முதல் இடம் பெற்று வரும் இச்சேவை தினமும் இரு தடவைகள் மட்டும் இடம் பெற்று வருகிறது. (க-45)

# "பக்தர்களின் பயம் நீக்கும் பழனி முருகன்"

சுன்னாகம், யாழ்.குடாநாட்டில் மிகவும் பிரபல்யம் மிக்க பட்டணமாகும். இலங்கைத்தீவில் இரண்டாவது பெரிய சந்தையைத் தன்னகத்தே கொண்டதால் அதன் கீர்த்தி மேலும் உயர்ந்தது. சுன்னாகம் சந்தையில் இருந்து சுமார் இருநூறு மீற்றர் தூரம் மேற்கு திசையாக— கந்த ரோடை வீதியில் சென்றால்,பக்திப் பரவசமூட்டும் பழனிமுருகன் கோவில் தென்படும். கோவிலின்முகப்பில் அமைந்துள்ள நாகபூசனி அம்மனும்—சமய குரவர்கள் நால்வரும்—முருகனும்—பிள்ளையாரும் மிக அற்புதமாக வடிவமைக்கப்பட்டு அழகிய கலையம்சம் கனிந்து— வர்ணக்கலவையில் நனைந்து உள்ளமை கண்கொள்ளாக் காட்சியாகும்.

பதினாறாவது ஆண்டு நிறைவை இன்று ஞாயிற்றுக்கிழமை பக்திசிரத்தையுடன் கொண்டாடும் பழனி முருகன் கோவிலின்உள்ளே—உயர்ந்து நிற்கும் மலையும்,ஐந்து தலை நாகமும், பாரத்தின் ஆறுபடை வீடுகளும் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டு உள்ளமையும் பார்ப்போரை பரவசத்தில் ஆழ்த்துவது ஒன்றும் புதுமையல்ல, ஆனால் மலையுடன் கூடிய இவையாவும் கோவிலில் புனித தீர்த்த நிலைமீது அமைக்கப்பட்டுள்ளமை அற்புதமானது.

மலைக்கான கல்லும் மண்ணும் ஈழத்தின் புனித தலங்களான நல்லூர்,நயினாதீவு, மாவிட்டபுரம்,துர்க்காபுரம், சிவனொளிபாதமலை, திருகோணேசர்மலை,கதிர்காமம் உட்பட்ட பல திருத்தலங்களில் இருந்தும், தென்னிந்திய திருத்தலங்களான திருத்தணிகை,பழமுதிர்ச்சோலை, திருச்செந்தூர் உட்பட பல திருத்தலங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்டு கோவிலை பரிபாலிக்கும் ''முருகன்மாமா'' என பக்தர்களால் அன்புடன் அழைக்கப்படுபவரின் கைவண்ணத்தில்உருவாகியுள்ளமை பழனி முருகனின் அற்புதமே.

மொழி,சாதி ,சமய,இன வேறுபாடுகளை கடந்து பக்தர்கள் வேண்டுவதை எல்லாம் வழங்கும் சுன்னாகம் பழனிமுருகன் ஆலயத்துக்குரிய மணியை முருகனின் அருளினால் இங்கிலாந்து சென்ற பக்தர் ஒருவர் லண்டனில் நிர்மாணித்து அனுப்பவுள்ளார். நூற்றிப்பதினைந்து அடி உயரமான மணிக்கோபுரத்தில் லண்டனில் இருந்து தருவிக்கபபடும் மணி விரைவில் ஒலிக்க ஆரம்பிக்கும் என்றும், அம்மணியோசை சுமார் நான்கு மைல் சுற்றாடலில் உள்ள மக்களுக்கு கேட்கும் எனவும் கூறப்படுகிறது.

பல அற்புதங்ளை செய்துள்ள பழனி முருகன் சந்நிதானத்தில் பூசை நேரங்களில் மூன்று வெள்ளை நிற நாகபாம்புகள் மலைக்குள்ளிருந்து வெளியே வந்து பூசைக்கு வைக்கப்படும் பால் பழங்களை உண்பதைக்காண பக்தர்கள் கூட்டம் கூட்டமாக செல்வது வழக்கம். எந்த வித கெடுதியையும் பக்தர்களுக்கு செய்யாது பூசை வேளைக்கு மாத்திரம் வெளியே வரும் வெள்ளை நாகபாம்புகள் முருகனின் பாதத்தில் நிற்பது ''அவன் அருளே'' என்கிறார் ''முருகன் மாமா''

தீராத நோய் தீர்க்கும் அற்புதம் நிறைந்த பழனி முருகன்' தமக்கு வழங்கிய திருவருளுக்கு நன்றி தெரிவித்து பல நூற்றுக்கணக்கான பவுண் வெள்ளி செப்பு ஆகிய உலோகங்களினாலான 'வேல்' சளை பக்தர்கள் கோயிலில் அன்பளிப்புச் செய்துள்ளமையை பார்த்ததும் பழனி முருகன் மேலுள்ள நம்பிக்கையும் பக்தியும் மேலும் பலபடி உயர்கின்றதை கோயிலுக்குச் செல்லும் ஒவ்வொருவரும் உணரக்கூடியதாக உள்ளது.

அளவெட்டிக் கிராமத்தின் தன்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்றுக்கு இரண்டு காலும் நடக்கமுடியாதிருந்தது. பல வைத்திய நிலையங்களுக்கு சென்று சிகிச்சை பெற்றும் குணமடையாததால் இறுதியாக பழனி முருகன் கோயிலில் தஞ்சம் அடைந்தனர். தங்கவேல் அட்சரம் போட்டு, வீபூதியும், தீர்த்தமும் வழங்கி கால் நடக்கமுடியாதிருந்த குழந்தையை ஏழு நாட்களில் நடக்க செய்த புதுமை அதி அற்புதமானது.

''பக்தர்கள் கேட்பதையெல்லாம் ஈயும் முருகா! தேம்பியழுது முழுக்கண்ணும் வற்றி விட்ட நிலையில் தமிழ் அன்னை, துயரத்தின் எல்லைக்கு சென்று விட்ட போதும், நீ ஏன் இன்னமும் அவள் கண்ணீரைத்துடைத்து துயர் நீக்கத் துணியவில்லை முருகா! சூரனை அழித்து மக்கள் துயர் துடைத்த வீரனே முருகா! நீஎப்போது எங்கள் துயர் தீர்க்க வருவாய் அழகா'' என்று பக்தியும் பரவசமும் கொண்டு பலரும் இன்று பழனி முருகன் சந்நிதானத்தில் கண்ணீர் மல்க வேண்டுதல் செய்வார்.

நம்பினோரைக் கைவிடாத தெய்வம் முருகன் என்பதும் மீண்டும் விரைவில் இங்கும் ஒருமுறை நிரூபணமாகட்டும்-

★

**ஜனனி, ஷாலினி**
**சுன்னாகம்**

மன்றம் யாழ்ப்பாணம்

உள்ளம் உடைமை
உடைமைபொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.
- குறள்

# வலம்புரி

## கலையுள்ளத்தின் கனவு

நீதியுடனும் சமத்துவத்துடனும் கூடிய சமாதானத்தை கலைப் பாலம் அமைத்த கலா மன்ற இயக்குநர் அவாவி நிற்பது ஆரோக்கியமானதும் அர்த்த புஷ்டியானதும் அவசியமானதுமாகும். மறையுள்ளமொன்று கலைதோய்ந்த உள்ளமாய் பாரிசு நகரில் ஒலித்த குரல் அது. கலையூடகம், மக்கள் ஊடகம் மக்கட் பரப்பை எழுச்சி பெற உயர்ச்சி பெறச் செய்யும் ஊக்கியுமாகும்.

பிரெஞ்சுநாட்டுமக்கள், சிங்கள தமிழ் மக்கள், நிறுவனத் தலைவர்கள், சமயத் தலைவர்கள் மத்தியில் உள்ளத்தின் அடிநாதத்திலிருந்து பிறந்தசுதந்திரமூச்சு அது. உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் மட்டுமே வாக்கினிலே ஒளி உண்டாகும். துறவியின் துணிவுக்கும் - நீதியாய் நினைக்கின்ற மன உறுதிக்கும்எங்கள் பாராட்டு.

கலை ஊடகம் வெறும் பொழுது போக்கு ஊடகமன்று. உள்ளத்துடிப்பை- உண்மை உணர்வை அப்பட்டமாக வெளிப்படுத்துவதொன்று என்பதை அவரது கலாமன்றம் பிரசவிக்கும் ஒவ்வொரு கலைநிகழ்ச்சிகளும் கட்டியங்கூறிநிற்பது யதார்த்த உண்மை-இந்த பாங்கில் வளர்ந்த அரங்கத்தில் நின்று கொண்டு சமாதானப் பிரார்த்தனையாகக் கொள்ளுங்கள் என்று குரல் கொடுத்தாரென்றால் கலை உள்ளத்தைக் குலையாதிருக்க கட்டுப்போடுவதொன்றே என்றதிடமான முடிவுக்கு வரலாம்.

மண்ணை நேசிக்கின்ற மரிய சேவியர் அடிகளார் கலையினூடு பெற்ற தாயைப் பார்க்கிறார். உற்றசுற்றக் கிளைகளைக் காண்கிறார். மதம் என்ற வட்டம் வாழ்வியல் பொதிந்த பூரண சுற்று என்பதை கலை வடிவங்களூடு கற்பிக்கின்ற பேராற்றல் அவருக்குண்டு. யாதும் ஊரே யாவருங் கேளீர். என்ற வரிகள் அடிகளாருக்கென்று எழுதப்பட்டதோ என எண்ணத் தோன்றுகிறது.

மரிய சேவியர் அடிகளார் ஒரு நிறை குடம். தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும் என்கிறது வள்ளுவர் அடிகளார் நமக்கு ஆற்றுப்படுத்திய மறையூடு கலை-வியத்தகு வகையில் காலத்தின் தேவையை-பூர்த்தி செய்கிறது. ஆல்போல் நிழற்றி அறுகு போல வேரூன்றி புதுமையும் பெருமையும் தந்து நிற்கின்றது.

- அன்புடன் ஆசிரியர்

# நெடுந்தீவில் உள்ள மதஒற்றுமை இலங்கையின் வேறுஎங்கும்இல்லை

## பேராயர் ஜெபநேசன் தெரிவிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் காணப்படுகின்ற சர்வமத ஒற்றுமையும், அமைதி, இயற்கை வனப்பு என்பன இலங்கையின் வேறெந்தப் பகுதியிலும் காணப்படாதவை என தென்னிந்திய திருச்சபை பேராயர் எஸ். ஜெபநேசன் தெரிவித்தார்.

நெடுந்தீவில் கடந்த புதன் கிழமை தென்னிந்திய தொழிற் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவமும், கண்காட்சியும் இடம் பெற்ற சமயம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

41 வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் பேராயர்எஸ். ஜபநேசன் சான்றிதழ் வழங்கினார். இவர்கள் 6 மாதம் தமிழ் தட்டச்சு, ஆங்கில தட்டச்சு, தையல், கைப்பணி என்பவற்றில் பயிற்சி பெற்றனர்.

தொடர்ந்து பேசிய ஜெபநேசன் அவர்கள் மேலும் கூறுகையில்: இரத்தக் கொதிப்பு, இருதய நோய் உள்ளவர்களும் இங்கு சில நாட்களைக் கழித்தால் குணமடைந்துவிடுவர் என்றார்.

மேலும், பெண்கள் சுதந்திரமாக வாழ வகை செய்ய வேண்டும் என்பதை இப்பொழுது உலகம் முழுவதுமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. கணவன்மாரின் உழைப்பிலேயே தங்கியிருந்தால் அவள் எப்பொழுதுமே ஆணுக்கு அடிமையாகவே இருத்தல் வேண்டும். இந்நிலையை போக்கும் எண்ணத்துடனேயே தான், மேல்நாட்டு நல்லுபகாரிக்ள் இத்தொழில் பயிற்சி நிலையங்களை நடாத்துவதற்கு வேண்டிய ஆக்கமும், ஊக்கமும் அளிக்கின்றார்கள் என குறிப்பிட்டார்.

முன்னதாச, பேராயர் அவர்களுக்கும், அவருடன் சென்ற தென்னிந்திய திருச்சபைகுருமார்களுக்கும் நெடுந்தீவு பிரதேசசபை உறுப்பினர்கள் மதியபோசன விருந்தளித்து கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் பேராயர். ஜெபநேசன் நெடுந்தீவில் தவத்திரு. தனிநாயகம் அடிகளுக்கு சிலை அமைக்கவேண்டும் என குறிப்பிட்டார். மேலும், நெடுந்தீவில் கணனி பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கும், அதற்காக நெடுந்தீவிலிருந்து சிலரை தெரிவுசெய்து கணனி பயிற்சி அளிக்கவும், தாம் முயற்சி செய்யப்போவதாகவும் குறிப்பிட்டார்.

பிரதேசசபை தலைவர். புலவர் ஆ. அரியநாயகம் தனது உரையில் நெடுந்தீவில் கல்வி வளர்ச்சிக்கு அமெரிக்கன் மிஷன் ஆற்றிய பணி ஒருபோதும் மறக்கப்படமாட்டாது என்று கூறினார். இன்று இத்தீவகத்தைவிட்டு பலர் இந்தியாவுக்கும், வன்னிப் பகுதிக்கும், தென்னிலங்கைக்கும் சென்றுவிட்டனர். ஒருகாலத்தில் நெடுந்தீவில் 31,000 மக்கள் வாழ்ந்தனர். இப்பொழுது 5,000 இற்கும் குறைவான மக்களே வாழ்கின்றனர். இந்தியாவுக்கு சென்றவர்கள் குறிப்பாக கடற்றொழிலாளர்கள் திரும்பிவருவார்கள் என்று தாம் நினைக்கவில்லை. என்று கூறினார். இன்று நமது பிள்ளைகள் கணனி பயிற்சிக்காக யாழ்ப்பாணம் செல்லவேண்டியுள்ளது. அங்கு அவர்கள் தங்குவதற்கு உறவினர்கள் வீடுமில்லை. ஆகையினாலே அவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். பெருமளவு நேரம் பிரயாணத்தில் முடிகின்றது எனவும் கூறினார்.

இவ்வைபவத்தில் நெடுந்தீவு பிரதேசசபை தலைவர் புலவர் ஆ. அரியநாயகம், நெடுந்தீவு பங்குத்தந்தை வண. எல். பொன்பேர்ட். அருட்செல்விகள் சீப்பிரியன், நொட்றிகோ, மற்றும் இந்து மதகுரு பிரம்மஸ்ரீ புவனேந்திர சர்மா, வைத்திய அதிகாரி சுவாமி நாதன், உதவி அரச அதிபர் கே. அரசரத்தினம், பல. நோ. கூட்டுறவு சங்க முகாமையாளர் தர்மலிங்கம், பல.நோ.கூ. சங்க தலைவர் என். சங்கரப்பிள்ளை, நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபர் எஸ். கிருஷ்ணதாஸ், பிரதம தபால் அதிபர் எஸ். தங்கராஜா துணை கல்வி அதிகாரி கே.அரசரத்தினம், தென்னிந்திய திருச்சபை திட்டப்பணிப்பாளர் எஸ். மித்திராஞ்சன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (க)

## மரவேலை பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(அரியாலை)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் இயந்திரசாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலையில், மரவேலைப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எட்டாம் ஆண்டு சித்தியடைந்த 14—30 வயதுள்ள ஆண்கள் யாழ். மாவட்ட சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சிக் காலத்தில் ஆறு மாதங்களுக்குத் தொழில் துறைத் திணைக்களத்தால் நாள் ஒன்றுக்கு ரூபா 30/ம் வேலை செய்யும்கூலியில் 80% இலாபப்பணமும் வழங்கப்படும்.

ஒரு வருடப் பயிற்சி முடிவில் தொழிற்றுறை திணைக்களத்தால் பரீட்சை நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். (க-84)

## குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் அப்பகுதி மக்களின் நன்மைகருதி குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனம்ஒன்றின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட இந்நீர் விநியோகத் திட்டத்தை ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை. சந்திரராசா அண்மையில் திறந்து வைத்துள்ளார்.

இதன் மூலம் இப்பகுதி மக்களின் நீண்ட நாளாக நிலவி வந்த நல்ல தண்ணீர்ப் பிரச்சனை நீங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தினம் தோறும் அதிகரிக்கும் மனக்கவலை ஆன்மீக வாழ்விற்கு சவாலாக அமையும்

''மறுபடியும் மனுமகன் வரும்போது மண்ணுலகில் விசுவாசத்தைக் காண்பாரோ?'' (லூக் 18: 8) என்றார் இயேசு. ஆம் இன்று நாம் வாழும் இந்த நாட்களிலேயே அவ விசுவாசம் பரந்து காணப்படுகின்றதென்றால் மண்ணுலகின் கடைசி நாட்களை நினைத்துப் பார்க்கவும் முடியுமா?

**நாளுக்கு நாள் பெருகி வரும் கடினமான மன நிலைகள் ஆன்மீக வாழ்க்கைக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளன.**


இவற்றால் சமுதாயத்தின் ஆணிவேரான குடும்பத்தின் விழுமியங்கள் ஆட்டங்காண்கின்றன.

நவீன வசதிகளும், கருவிகளும் மனிதன் பேரின்பத்தை நாடுவதை விடச் சிற்றின்பத்தையே மிகுதியாக நாட வழி வகுக்கின்றன. உண்மையை விட விவேகமான கட்டுக் கதைகளை ரசிக்கும் இன்றைய சமுதாயம் தேவ பயம்அற்றுப் வெளித்தோற்ற மாயையைக் கொண்டிருப்பதினால் அசலுக்கும், நகலுக்கும் வித்தியாசம் உணர முடியாத அசமந்தப் போக்குக் காணப்படுகின்றது.

இதனால், தேவகுமாரன் இயேசுவின் ''பரலோகத்திற்கான வாசல் ஒடுக்கமானது,, (லூக் 13;24) என்ற வாக்கு உண்மையாகிக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

அப்படியாயின், யார்தான் மீட்புப் பெறுவார்கள்? மீட்புச் சாத்தியமா? என்ற கேள்விகள் மனதில் எழுப்பாமல் இருக்க முடியாது.

இயேசுக் கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த போது தாம் கடவுளின் குமாரன் என்பதை நீரூபித்து, போதனைகள் செய்து உலகின் எதிர் காலம் எப்படிஇருக்கும் என்று எதிர்வுகள் பல கூறி, இறை



வனின் மீட்புத் திட்டம் என்ன? எத்தகையோர் மீட்படைவர்? மீட்படைய வழி என்ன?என்பவற்றை விளக்கியுள்ளார்.

தூய ஆவியானவரின் ஏவுதலால் எழுதப் பெற்ற வேதாகமம் எமக்கு இவற்றைத் தந்து கொண்டிருக்கின்றது.

இதனாலேயே ''பரிசுத்த வேதாகமத்தைப் பெற்றிருப்பது தான் மனிதகுலம் மகிழ்ந்து அனுபவிக்கும் மாபெரும் ஆசீர்வாதம்'' என ஜெர்மன் தத்துவஞானி இம்மானுவெல் காண்ட் கூறி இருக்கின்றார்.

மத்தேயு (19; 2366) வசனங்களில் இயேசு ''பணக்காரன் விண்ணுலகில் நுழைவது அரிது'' என்ற போது அவருடைய சீடர் மலைத்துப் போய் ''அப்படியானால் யார்தான் மீட்புப்பெற முடியும் என்று கேட்க: இயேசு அவர்களை உற்றுநோக்கி ''மனிதனால்இது முடியாது. ஆனால் கடவுளால் எல்லாம் முடியும்'' என்று கடவுளின் கிருபையை எடுத்துக் கூறினார். கடவுளின் மீட்புத் திட்டத்தில் அவரின் கிருபை முக்கிய பங்கினை வகிக்கின்றது.

கிறிஸ்து இயேசுவின் போதனையின்படி, ஒவ்வோர் ஆன்மாவும் தான் செய்த பாவத்திற்கான தண்டனையை நீதியின் அடிப்படையிலும் மேலாக, கிருபையின் அடிப்படையில். பரம் பொருளை அடைகின்றது.

ஏனெனில், எமது பாவத்திற்கானகிரயத்தைக் கிறிஸ்து இயேசு தமது சிலுவைப் பலி மூலம் ஏற்கனவே செலுத்தி விட்டார். ஆகவே மனிதன் தன் பாவத்திற்காய் உண்மையாக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டாலே போதும்: மீட்புப் பெறுவான். இதுதான் அளவிட முடியாத அன்பு, கிருபை என்லாம்.

ஊதாரி மகன் உவமையின் மூலம் மனம் வருந்துதல், கடவுளின் கிருபை முதலியன நமக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வளவு கிருபை உருவான இறைவனை நாம் எப்படி நேசிக்காமல் இருக்க முடியும்.

மலைப் பிரசங்கத்தில் இயேசு தமது பிதாவின் மீட்புத் திட்டத்தில் கிருபையின் பங்கை நன்கு வெளிப்படுத்தியிருக்கின்றார். (மத்தேயு 5.7 - 10)

இறைவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட மாண்பு மிக்க மனித விழுமியங்களான எளிய மனம், இரக்கம், சாந்தகுணம், நீதியின் பால் பசிதாகம், துன்பத்தில் சகிப்புத்தன்மை, தூய சிந்தனை, சமாதானம் செய்யும் மனப்பாங்கு கொண்டவர்களுக்கான வாக்குத் தத்தங்கள் இயேசுக் கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாக்குத்தத்தங்களின்படி மேற் கூறப்பட்ட மனித விழுமியங்களுள் ஏதாவது ஓர் அருங்குணம் ஒருவருக்கு இருக்குமாயின் எவ்வளவு பெரும் பாவிக்கும் கடவுளின் கிருபை கிட்டுகின்றது. அவனும் மீட்கப்படுகின்றான்.

### பரமபிதா காட்டிய பாதை

ஆகவே கிருபையின் காலமான இந்நாட்களில், இறைவனின் மீட்புத் திட்டத்தில் பங்குகொள்ள எம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட மனித விழுமியங்களை தூய ஆவியானவரின் துணை கொண்டு பேணி வளர்ப்போமாக.

இருதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும்உள்ள இயேசுவே.

எமது இருதயத்தை உமது இருதயம் போல் ஆக்கியருளும்.

★

-சகோதரன் சேவியர்ஜோசவ்

# ஆசிரியர் சேவையில் தரமுயர்வு

# இறுக்கமான நிபந்தனைகள் நீக்கம்

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(திருகோணமலை)

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் தற்போதைய ஆசிரியர் தரத்திலிருந்து அடுத்த தரத்திற்கு பதவி உயர்த்த விதிக்கப்பட்டிருந்த இறுக்கமான நிபந்தனைகள் அனைத்தும் தற்போது நீக்கப்பட்டுள்ளதாகக் கல்வி உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் உபசேன சேனநாயக்கா அறிவித்துள்ளார்.

★ இதன்படி ஆசிரியர் சேவையில் வகுப்பு 3 தரம் ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர்கள் ஐந்து புள்ளிகளைப் பெற்றிருந்தால் வகுப்பு 2, தரம் இரண்டிற்குச் சுயமாகப் பதவியுயர்த்தப்படுவர். இப்புள்ளி வழங்கலானது பயிற்சிக் கலாசாலைச் சான்றிதழ் பெற்றதில் இருந்து ஒருவருடத்திற்கு ஒரு புள்ளியெனக் கணிப்பிடப்படும்.

★ வகுப்பு 2, தரம் இரண்டில் கடமையாற்றும் ஆசிரியர்கள் 10 புள்ளிகளைப் பெற்றிருந்தால் சுயமாகவே வகுப்பு 2, தரம் ஒன்றிற்கு பதவி யுயர்த்தப்படுவார்கள்.

★ வகுப்பு 2, தரம் ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர்கள் ஐந்து புள்ளிகளைப் பெற்றிருந்தால் அவர்கள் வகுப்பு ஒன்றிற்கு சுயமாகவே பதவியுயர்த்தப்படுவார்கள்.

மேற்படி பதவி யுயர்வைப் பெறுவதற்கு சேவைக் காலப் பயிற்சிச் சான்றிதழ்களோ, அல்லது கஸ்ரப்பிரதேசங்களில் கட்டாயம் மூன்று வருடங்கள் சேவையாற்றியிருக்க வேண்டுமென்பதோ அல்லது ஐம்பது வயதை அடைந்திருக்க வேண்டுமென்பதோ, நிபந்தனையாக அமையாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சலுகையானது இரண்டாயிரம் ஆண்டு டிசம்பர் 31ந் திகதி வரையே நடைமுறையில் இருக்கும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஆசிரியர் பதவியுயர்வுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட இறுக்கமான நிபந்தனைகளை உடன் ரத்துச்செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உட்படப் பல ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கோரியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

விதிக்கப்பட்ட நிபந்தனைகளை இரத்துச் செய்தமை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கல்வி உயர்கல்வி அமைச்சுக்கு நன்றி தெரிவித்துள்ளார்

## பதுளையில் இரு இளைஞர் கைது

(பதுளை)

பதுளையில் நகைக்கடையொன்றில் வேலை செய்த இரு இளைஞர்கள் பதுளைப் பொலிஸாரினால் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ் விருவரும் மட்டக்களப்பு, ஏறவூர்ப் பகுதிகளைச் சேர்ந்தவர்களென வும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## பொற்கோவின் இறுதிச் சடங்கு நேற்று நடந்தது

கடந்த 15ந் திகதி மல்லாவியில் சுகயீனம் காரணமாக மரணமடைந்தலெப். கேணல் பொற்கோவின் [அந்தோனிப் பிள்ளை மரியநேசன்] இறுதி நிகழ்வுகள் நேற்று மல்லாவியில் இடம்பெற்றன.

இவ் இறுதி நிகழ்வில் அவரது தாயாரும் மனைவியும் ஈகைச்சுடர் ஏற்றிவைத்தனர். இறுதி நிகழ்வில் மூத்த தளபதி பொட்டு அம்மான் மலர்மாலை அணிவித்து அஞ்சலியுரை நிகழ்த்தினார்.

## பத்திரிகையாளர் அனுமதி

(வவுனியா)

பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்பட்ட வன்னிப் பகுதிகளுக்கு எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது,

## யாழ். குடாநாட்டின் பலபகுதிகள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்

யாழ். குடாநாட்டின் பல்வேறுபகுதிகள் நேற்றுக் காலை இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு பாரிய தேடுதல் நடாத்தப்பட்டது.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது படையினர் வீடு வீடாகச் சென்று சோதனைகளை நடத்தினர்,

நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், இறுப்பிட்டி, சுதுமலை தாவடி, கொக்குவில் ஆகிய பகுதிகளே சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாக பிராந்திய செய்தியாளர்கள் அறிவித்தனர்.

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் மந்துவில் கிழக்குப் பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது,

(வ. 39,57)

## மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூடு இரு சிறுமிகள் உட்பட மூவர் காயம்

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனையில் நேற்றுமாலை 6 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவரும் பெண் பிள்ளைகள் இருவரும் காயமடைந்தனர்.

எஸ். இராஜேஸ்வரன் [வயது 40] அவரது பிள்ளைகளான றஜிதா [வயது9], றணித்தா [வயது7] ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருக்கும் இடத்திற்கருகில் இராணுவ முகாம் இருப்பதாகவும் தெரியவருகிறது. (ந)

## வவுனியாவில் லொறிச்சாரதிகள் இன்று ஒரு நாள் வேலைநிறுத்தம்

[வவுனியா]

வவுனியாவிற்கும் கொழும்பிற்குமிடையில் தனியார் லொறிகளின் சாரதிகள் மற்றும் கிளினர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக வவுனியா வர்த்தகர்சங்கத்திற்கு அறிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து லொறிகளில் ஏற்றிவரும் பொருட்களை ஈரப்பெரிய குளம் சோதனைச்சாவடியில் நீண்ட சோதனைகளால் தாம்காத்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் தாம் வேறும் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளனர். (103)

## ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானை இலங்கை வென்றது

(பாகிஸ்தான்)

லாகூரில் நடந்த மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 104 ஓட்டங்களால் தோற்கடித்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஐம்பது ஓவர்களில்ஒன்பது விக்கட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது. மாவன் அத்தப்பத்து 77ஓட்டங்களையும், மகேல ஜெயவர்த்தனா 43 ஓட்டங்களையும் பெற்றனர்

பதிலுக்கு ஆடத்தொடங்கிய பாகிஸ்தான் அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்கள் மட்டுமே பெற்றது.

இவ் ஆட்டத்தின்ஆட்டநாயகனாக இலங்கை அணி வீரர் மாவன் அத்தப்பத்து தெரிவு செய்யப்பட்டார். இதன்மூலம் இலங்கை 3-0 அடிப்படையில் தொடரை வென்றுள்ளது.

## திறந்த பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்தவெளிப் பல்கலைக்கழக பட்டமேற் கல்வி டிப்ளோமா 98 / 99 பரீட்சையின் பகுதி1இன்பெறுபேறுகள் பிராந்திய இயக்குனரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு-

கே. என். நல்லநாதன், ஜி. உருத்திராகரன், பி. மலர்மகள், ரி. சறோசா, ஈ. கிருஷ்ணராசா, எஸ். சரச்சந்திரன், எம். சரவணபவஐயர், எஸ். ஜெகதீஸ்வரிஅம்மா, ஆர். வதனா, எஸ். யோகராசன், எஸ். விஜயநாதன், வி. றெஜிகுமார், கே. அன்ரன்டயஸ்,

கே. குமுதினி, சீ. ஜெ. ஜெயசீலன், ரீ. கிருவாகினி, எஸ். தேவா, கி. கிருஷ்ணபிள்ளை, எஸ். தவராணி, எஸ். ஜெயந்தகுமாரி, சீ.கே. சைவஇறைமணி, ஆர்.இராசலிங்கம், வி. சுந்தரேசன், கே. ஜெயந்தா, கே. கண்ணன், கே. சுசிலாராணி. என். சரவணபவன்.

(வ)

### உண்ணாவிரதிகள் . . .

கடந்த 10 ஆம் திகதி முதல் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் படையினர் தம்மை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி உண்ணாவிரதமிருந்து வருகிறார்கள்.

இதேவேளை தம்மை விடுதலை செய்ய அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்றும் 21 ஆம் திகதிக்கு முன் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தாம் நீர் அருந்தாது சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ள போவதாகவும் உண்ணாவிரதிகள் அறிவித்துள்ளனர்.

(வ-04)

ஸ்ரீ செல்வா
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
பிரபுதேவா, ரோஜா
நடித்த
ஏழையின் சிரிப்பில்
(புதிய வெளியீடு)
நேரடி CD
10.30-2.30 (ப. நே.)
மகளிருக்கு இடமுண்டு
(00115)

### சிற்றி ஒவ் . . .

இதேவேளை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையோ அல்லது கடற் படையினரின் பாதுகாப்போ இன்றி இக்கப்பல் தனது பயண சேவையை ஆரம்பிக்குமெனத் தெரிய வருகிறது.

எனினும் இக்கப்பலில் பாதுகாப்புப் படையினர் எவரும் பயணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை பாதுகாப்புப்படை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் கப்பலின் பயண சேவைக்கு கடற்படை பாதுகாப்பு வழங்குவதாயின் ஒரு மணித்தியாலத்திற்கு 25கிலோமீற்றர் ஓடவேண்டுமெனவும் ஆனால் இக்கப்பல் மணித்தியாலத்திற்கு 15கிலோமீற்றர் தூரமே ஓடுமெனவும் இதனாலேயே கடற்படை பாதுகாப்பு வழங்க மறுத்துள்ளதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கப்பலின் அடித்தளத்தின் தற்போதைய நிலையை பரிசோதிப்பதற்காக இந்தியாவிலிருந்து தொழில்நுட்பவியலாளர்கள் விரைவில் கொழும்பு வரவுள்ளனர்.

உதவியாளர்கள் தேவை

உரும்பிராயில் புதிதாக ஆரம்பிக்கவுள்ள வியாபார நிறுவனத்துக்கு உதவியாளர்கள் தேவை. இளைஞர் யுவதிகள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்ப முடிவுதிகதி:- 2000/02/26 சனி
★ நேர்முகப்பரீட்சை:- 2000/02/28 திங்கள் காலை 10.00மணி

தொடர்பு முகவரி:- விளம்பர இல- 001
வலம்புரி,
15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.
(கி/87)

### அமைச்சர் . . .

தியாலம் நடைபெற்ற இப் பேச்சுக்களில் அண்மையில் இலங்கை வந்து பேச்சு நடத்திய நோர்வே வெளிவிவகார அமைச்சர் கெனட் வொலிபேக்கின் கருத்துக்கள் பற்றி ஆராய்வதற்காகவும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்கவுடனான பேச்சுக்களிற்கு முன்னோடியாகவுமே இப்பேச்சுக்கள் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது,

இதேவேளைஅரசும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் எதிர் வரும் 22ஆம் திகதி பேச்சு நடத்த விருப்பது குறிப்பிடத்தக்கது, (4)

### பெற்றோர் . . .

பதும் அவர்கள் விபரங்களைத் திரட்டுவதும் கடினமானதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கைதிகளின் பெற்றோர்களை அழைத்துச் செல்லும் பணியை ஒரு மனிதாபிமான அடிப்படையிலேயே மேற்கொள்வதாகவும் அதனடிப்படையில் பத்திரிகையாளர்களையோ அல்லது காணாமற் போன படையினரின் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களையோ வேறு மேலதிக உறவினர்களையோ கூட்டிச் செல்ல முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கம் யுத்தக்கைதிகளின் உண்ணாவிரதம் குறித்து திருப்திகரமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் இது ஒரு மனிதாபிமான மற்ற செயல் என்றும் காணாமல்போன பாதுகாப்புப்படையினரின் பாதுகாவலர் சங்கத்தலைவர் ஈ. பி. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கைதிகள் விடுதலை தொடர்பாக அரசும், விடுதலைப் புலிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது சங்க உறுப்பினர்களும் பத்திரிகையாளர்களும் உறவினர்களும் வன்னி சென்று கைதிகளைப் பார்வையிட மனிதாபிமான முறையில் அனுமதிக்க அரச நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஈ. பி. நாணயக்கார அரசைக் கேட்டுள்ளார். (வ-4

### ரணில் . . .

வரால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் விதத்திலும் எதிர்வரும் 22 ஆம் திகதி அரசுக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடம்பெறவுள்ள பேச்சுக்கு அழைப்பு விடும் விதத்திலும் இக்கடிதம் அமைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த அழைப்புக் கடிதத்துடன் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான அரசின் யோசனைகளின் பிரதியொன்றும் எதிர்க்கட்சித் தலைவரின் பார்வைக்காக இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த இரண்டு வாரங்களாக அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் கருத்துப் பரிமாற்றல்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஏற்கனவே அறிவித்தபடி இதுவரை மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலை மையமாகவைத்து ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (வ7)

## அதிகாரசபை உருவாக்கம்

(இலண்டன்)

கிழக்குத் தீமோர் பிரதேசத்தில் ஆட்சி செய்யும் பொறுப்பை ஒப்படைக்கும் வகையில் தற்காலிக அதிகாரசபை ஒன்றினை உருவாக்கும் முயற்சியில்ஐக்கிய நாடுகள் சபை ஈடுபட்டுள்ளதா செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.